## பள்ளிக் கல்வித் துறை

அனுப்புநர்
இயக்குநர்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை-06

பெறுநர்
1. இயக்குநர்
பள்ளிக் கல்வி இயக்ககம்,
சென்னை-6.
2. இயக்குநர்
தொடக்கக் கல்வி இயக்ககம்,
சென்னை-6
3. இயக்குநர்
தனியார் பள்ளி இயக்ககம்,
சென்னை-6

**ந.க.எண்.** 386541 /SCERT/1137/2024-E3 நாள் 23.12.2024

**பொருள்:** சென்னை-06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் – அனைத்து வகை அரசு/அரசு உதவிப் பெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளி – கற்றல் கற்பித்தல் மற்றும் காணொலி உருவாக்கத்தில் ஆர்வம் கொண்ட ஆசிரியர்களை அடையாளம் காணுதல் –சார்பு

**பார்வை :** 1. 20.12.2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பள்ளிக் கல்வி செயலாளர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரையின்படி.
2. ஒருங்கிணைப்பாளர் செல்வி. பி. மேக்டலின் பிரேமலதா அவர்களிடமிருந்து பெறப்பட்ட மின்னஞ்சல் நாள் 23.12.2024

---

மேற்பொருள் சார்ந்து பார்வை 1-இல் காணும் அரசு செயலாளர் அவர்களால் வழங்கப்பட்ட அறிவுரையினை ஏற்று, அனைத்து வகை அரசு/அரசு உதவிப் பெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் மற்றும் காணொலி உருவாவாக்கத்தில் ஆர்வம் கொண்ட ஆசிரியர்களை அடையாளம் காணுதல் சார்பாக இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களை பின்பற்றி செயல்படுமாறு பள்ளிக் கல்வி, தொடக்கக் கல்வி மற்றும் தனியார் பள்ளி இயக்குநர்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் சார்ந்து தெளிவுரை ஏதும் தேவைப்பட்டின் இந்நிறுவன ஒருங்கிணைப்பாளர் செல்வி. பி. மேக்டலின் பிரேமலதா அவர்களை (கைபேசி எண் 9443554078) கைபேசி மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு

23/12/24
இயக்குநர்
23/12/24

நகல்

அரசுச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9

www.Padasalai.Net

## ANNEXURE

### State Council of Educational Research and Training, Chennai-6

**Are you passionate about teaching and have a knack for engaging students?**

We are looking for a dynamic and engaging Video Presenter to create and deliver educational content on a variety of subjects! Whether you have experience in teaching, communication, or simply a love for sharing knowledge, we want to hear from you!

We are looking for:

- Government, Aided or Private school teachers with a passion for teaching and video content creation.
- Ability to explain complex topics in an accessible, fun, and engaging way.
- Previous experience in front of a camera is a plus but not required. Training will be provided.
- Ability to innovate and bring fresh ideas to educational content.
- Comfortable working with different types of content and learning new topics quickly.

Click **here to Apply:**

Interested teachers should submit the following.

3. A **short video** (1-2 minutes) showcasing your presenting style or a sample lesson on a topic you are passionate about.
4. **Any relevant experience** or links to past video work, if applicable

www.Padasalai.Net

**இணைப்பு**

**மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6**

## நீங்கள் கற்பித்தலில் ஆர்வமுள்ளவரா? மாணவர்களை கற்றலில் ஊக்குவிக்கும் மற்றும் ஈடுபடுத்தும் திறமை உள்ளவரா?

பல்வேறு பாடங்களில் கல்வி சார்ந்த காணொலிகளை உருவாக்கி வழங்க, மாணவர்களை ஈர்க்கக்கூடிய விதத்தில் கற்பிக்கும் திறன்மிக்க ஆசிரியரை தேடுகிறோம்! கற்பித்தல் மற்றும் தகவல் பரிமாற்றம் போன்றவற்றில் நீங்கள் அனுபவம் உள்ளவரா அல்லது கற்றவற்றை பகிர்ந்து கொள்வதில் ஆர்வம் உள்ளவரா, இதோ உங்களுக்கான அழைப்பு...

**யார் யார் விண்ணப்பிக்கலாம்?**

- கற்றல் கற்பித்தல் மற்றும் கல்வி காணொலி உருவாக்கத்தில் ஆர்வம் கொண்ட அரசு, உதவி பெறும் அல்லது தனியார் பள்ளி ஆசிரியர்கள்.
- சிக்கலான தலைப்புகளை எளிமையாக, சுவாரசியமாக மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கும் திறன் உடையவர்கள்.
- கேமராவின் முன் அனுபவம் இருந்தால் சிறப்பு. இல்லையேல் பயிற்சி அளிக்கப்படும்.
- கற்றல் கற்பித்தலில் புதுமையான மற்றும் மகிழ்வான கற்றலை ஊக்குவிக்கும் ஆசிரியர்கள்.
- புதிய அணுகுமுறைகளை கற்றுக் கொள்ளும் ஆர்வமும் அதனை கற்றல் கற்பித்தலில் செயல்படுத்தும் திறனும் உடையவர்கள்.

**விண்ணப்பிக்க இங்கே கிளிக் செய்யவும்:**

ஆர்வமுள்ள ஆசிரியர்கள் பின்வருவனவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

1. **ஒரு சிறிய காணொலி (1–2 நிமிடங்கள்)** உங்கள் கற்பிக்கும் திறனை விளக்கும் வகையில், நீங்கள் ஆர்வமாக இருக்கும் தலைப்பில் ஒரு பாடத்தை கற்பிக்கும் மாதிரி காணொலி.

2. ஏற்கனவே காணொலி தயாரித்து சமூக வலைதலங்களில் பதிவேற்றம் செய்திருந்தால் அதற்கான இணைப்பு (Video Link).

www.Padasalai.Net